08-8-1991

# கோட்டை இராணுவம்போல் ஆனையிறவு படையும் வெளியேறும்?

(லண்டன்)
ஆனையிறவு முகாமுக்குள் இராணுவம் புகுந்த நிகழ்வானது, கடந்த வருடம் யாழ். கோட்டைக்குள் படையினரில் சிலர் ஒரு முயற்சியில் உட்புகுந்த நிகழ்வுக்கு சமமாகவே இருக்

(4ம் பக்கம் பார்க்க)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 திருவள்ளுவர் ஆண்டு 2022 ஆடி 20 இதழ்: 175
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 5-8-1991

## ஹமில்டன் விரைவு

(கொழும்பு)
ஆனையிறவு இராணுவ முகாமுக்கு நேற்றுமுன்தினம் இராணுவத் தளபதி லெப். ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா விரைந்து சென்றதாக அரசு அறிவித்தது.

(4-ம் பக்கம் பார்க்க)

## இட்டுவை பலவந்தமாக நாடு கடத்த முயற்சி?

(லண்டன்)
தமிழீழ விடுதலைப்புலிகளின் சர்வதேச விவகாரப் பொறுப்பாளர் திரு. கிட்டு (சதாசிவம் (கிருஷ்ணகுமார்) பிரிட்டனின்

(4ம் பக்கம் பார்க்க)

# ஆனையிறவு போர் முடியவில்லை

# ராணுவம் பொறியில் சிக்கியது!

## புலிகள் பிரமுகர் பி. பி. ஸிக்கு தகவல்

(லண்டன்)

**ஆனையிறவு போர் இன்னமும் முடிவடையவில்லை. படையினர் தற்போது புலிகளின் பொறிக்குள் அகப்பட்டுள்ளதாக லண்டன் பி. பி. ஸிக்கு விடுதலைப்புலிகளின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.**

கட்டைக்காடு வெற்றிலைக் கேணிப் பகுதிகளில் தரையிறங்கி முன்னேறிய படையும் ஆனையிறவு முகாமினுள் இருந்த படையும் இவ்வாறு புலிகளின் பொறிக்குள் சிக்கியுள்ளதால் இந்த யுத்தம் மேலும் தொடரும் என்றும் அந்தப் பேச்சாளர் பி.பி.ஸி.க்குத் தெரிவித்தார்.

இதேவேளை ஆனையிறவுப் பகுதியிலுள்ள இராணுவ முகாம் அகற்றப்படமாட்டாது. மேலும் பல முகாம்கள் அங்கு அமைக்கப்பட இருப்பதாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணங்கா தெரிவித்துள்ளார்.

ஆனையிறவு முகாமை சுற்றியுள்ள சில பகுதிகளில் மிதிவெடிகள், கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை படையினர் மேற்கொள்ளவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (மா)

## ★ புலிகள் படையினர் நேற்று கடும் மோதல்

(யாழ்ப்பாணம்)
ஆனையிறவு முகாமைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் குறிஞ்சாத் தீவுப் பகுதியிலும் விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் நேற்று கடும் மோதல்கள் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. [மா)

## தமிழகபல்கலைக்கழகங்களில் இலங்கைமாணவருக்குதடை

[சென்னை]
இலங்கைத் தமிழ் மாணவர்கள் சென்னை பல்கலைக்கழகங்களில் கல்வி பயில்வது தடை செய்யப்பட்டுள்ளதாக சென்னையிலிருந்து வெளிவரும் இந்து பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பல்கலைக்கழக பணிப்பாளர் சபையின் உத்தரவினால் இலங்கைத் தமிழ் மாணவர்கள் எவ்வளவு பேர் பாதிக்கப்பட்டுள்ளார் என்ற விபரம் குறிந்து இந்துப்பத்திரிகையில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (க)

## 24 நாட்கள் முற்றுகையில் 170 படையினர் பலி

### 600 சிப்பாய்கள் காயம்

(கொழும்பு)
இருபத்திநான்கு நாட்களாக இடம்பெற்ற ஆனையிறவுச் சண்டையில் 170 படையினர் பலியானதாகவும் 600 பேர் காயமடைந்ததாகவும் சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

ஒரு வருடமாக விடுதலைப் புலிகளின் முற்றுகைக்குள் இருந்த இம்முகாமிற்குத் தேவையான உணவுப்பொருள் மருந்துவகைகள் யாவும் விமானங்கள் மூலமே அனுப்பப்பட்டுவந்தன. கடந்த 10-ம் திகதியிலிருந்து உணவுப் பொருள்கள் வழங்கமுடியாத அளவிற்கு புலிகள் பலமாக முற்றுகையிட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

இம்முகாமில் காயமடைந்திருந்த பல படையினர் நேற்று முன்தினம் அநுராதபுரம ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## விஞத்தாள்களை கப்பலில் அனுப்புமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)
கப்பல் மூலம் விஞத்தாள்களை அனுப்பி க. பொ. த (உயர்தர) பரீட்சையைநடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ் கல்விப் பணிப்பாளர் இ சுந்தரலிங்கம் கல்வி அமைச்சின் செயலாளரைக் கேட்டுள்ளார்.

தற்பொழுது வவுனியாவில் இருக்கும் விஞத்தாள் மற்றும் பரீட்சைக்குரிய ஆவணங்களை பலாலிக்கு விமான மூலம் எடுத்துவந்து காங்கேசந்துறை மூலம் பருத்தித்துறைக்கு அனுப்பி வைத்தால் செஞ்சிலுவைச் சங்க மூலம் விஞத்தாள்கள் எடுத்து வந்து பரீட்சையை நடத்தலாம் என்று அவர் தெரிவித்துள்ளார்.(152

## 300-க்கும் அதிகமான போராளிகள் வீரமரணம்

[யாழ்ப்பாணம்]
''ஸ்ரீலங்கா பேரினவாத அரசுக்கு எதிராகச் சகலரும் ஆயுதம் ஏந்திப் போராடினால் மாத்திரமே தமிழீழ மண்ணில் இருந்து இராணுவத் துருப்புக்களை விரட்டி அடிக்கமுடியும்.''

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிப் பிரமுகர் திரு. சலீம், தொழில் நுட்பக் கல்லூரியில் நேற்று நடைபெற்ற போர்க்காலக் கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஆனையிறவு யுத்தத்தின் போது 300க்கும் மேற்பட்ட போராளிகள் வீரமரணமடைந்துள்ளார்கள். ஆயிர...

[4-ம் பக்கம் பார்க்க]

## பொம்மரிலிருந்து ரொக்கட் வீச்சு

(புலோலி)
குடத்தனை, குடாரப்பு ஆகிய இடங்களில் வானில் பறந்துகொண்டிருந்த பொம்மர் ரொக்கட் குண்டுத் தாக்குதல்களைப் பொது மக்களை நோக்கி அண்மையில்

(4ம் பக்கம் பார்க்க)

## பட்டினியை எதிர்நோக்கி எழுவைதீவு மக்கள்

[ஊர்காவற்றுறை]
உணவுப் பொருள் எதுவும் இல்லாமல் எழுவைதீவு மக்கள் கடந்த இரண்டு வாரங்ளாகப் பட்டினிச் சாவை எதிர் நோக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தீவுப்பகுதியிலுள்ள எழுவைதீவு மக்கள் தமது பகுதிக்கு உணவுப்பொருள்களை அனுப்பி வைக்குமாறு பல அமைப்புக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(4ம் பக்கம் பார்க்க)

## இராணுவ நடவடிக்கை முடிவடையவில்லை

(கொழும்பு)
ஆனையிறவு இராணுவ முகாமில் சிக்கியிருக்கும் படையினரை மீட்டதுடன் மாத்திரம் தமது இராணுவ நடவடிக்கை முடிவடைந்துவிடவில்லையென அரசு அறிவித்துள்ளது.

ஆனையிறவு முகாமில் காயப்பட்டிருந்த 55 இராணுவத்தினருக்கும் சிகிச்சை அளிக்கப்பட்டதாகவும், விடுதலைப் புலிகளுடன் தாம் கடுமையாக யுத்தம் புரியவேண்டியிருந்ததாகவும் இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

### அரசு அறிவிப்பு

இதேவேளையில் ஆனையிறவு முகாமை விஸ்தரிக்கும் பணிகளை மேற்கொள்ள இருப்ப

(4ம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்


## விற்பனைக்கு

அழகான முதிரையில் செய்யப்பட்ட வீட்டுப் பாவனைக்குள்ள சோக்கேஸ் ஒன்று விற்பனைக்குண்டு. தொடர்பு; P. சின்னத்துரை, சந்தை ஒழுங்கை, கிழக்கு மானிப்பாய். (சி-5064)

## விற்பனை

நவீன எலக்ரோனிக் அக்காய் ஒடியோ டெக், எக்சோ ஈகுவலைசர், C D பிளேயர், எலக்ரோனிக் டப்பிங் டெக், நெஷனல் வீடியோ டெக், நெஷனல் S-1 வீடியோ மிக்சர் முதலியன விற்பனைக்குண்டு. கிழமை நாட்களில் தொடர்புகொள்ளவும். விக்ரேஸ், இல: 23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். (சி5070)

## புதிய "மீரா நாவல்"

இன விடுதலையை மையமாக எழுதப்பட்ட சங்கரன், அக்கினி, முள்முடி மன்னர்கள், சிறுவர்களுக்கு 'இராவணன் கோட்டை' இன்னும் உயிரோட்டமான பத்து "மீரா நாவல்கள்" விற்பனையாகின்றன. (சி 5041)

## மணப்பெண் தேவை

இந்துமத (1) 37 வயது லக்கினத்தில் செவ்வாய். ஆறுல் தோஷம் இல்லை. வியாபாரத்தைத் தொழிலாகக் கொண்ட அண்ணனுக்கும் (2) 35 வயது குற்றம் இல்லாத நல்ல ஜாதகம் உள்ள ஐரோப்பிய நாடொன்றில் உத்தியோகம் பார்க்கும் திருமணத்திற்காக விரைவில் நாடு திரும்பவுள்ள தம்பிக்கும் அழகான, பண்புள்ள நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணப்பெண்கள் தேவை. விண்ணப்பிக்கவும். விளம்பர இல. சி-5061 மே/பா ஈழநாடு யாழ்ப்பாணம். (சி-5061)

## விற்பனைக்கு

விளைகெரிக்க, பயிர் பீடை பூச்சி அகற்ற, மருத்துவ பாவனைக்குச் சுத்தமான வேப்பெண்ணெய் போத்தல் ரூபா. 90/- மில்க்வைற், யாழ்ப்பாணம். (எ-1476)

நல்ல நிலையிலுள்ள Honda விற்பனைக்கு உண்டு. மகனற் மொடல் [பற்றரி தேவை இல்லை] தொடர்பு கொள்க:- T. மனோகரன், பழைய இல. 3. அம்மன் ரோட். கந்தர்மடம், யாழ்ப்பாணம். [சி-5075]

## புலமைப் பரிசில் பரீட்சை

[ஆண்டு 5]

புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை 9வது, 10வது பெறுதவர்கள் அதனைப் பெற்று விடையெழுதிக் கொடுத்தால் இலவசமாக உடன் திருத்திக் கொடுக்கப்படும். புலமைப்பரிசில் மாதிரிப் பயிற்சியும் கடந்தகால வினாத்தாள்களையும் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம். புதிய கல்வி நிலையம், 219 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [சி-5076]


## ஷெல் தாக்குதல்

[புலோலி]

வெற்றிலைக்கேணியில் நிலைகொண்டுள்ள படையினர் இரவு வேளைகளில் பரா வெளிச்சங்களை ஏவி ஷெல் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்ஷெல்கள் ஆழியவளை, உடுத்துறை கிராமங்களிலும், அவற்றைச் சூழவுள்ள காடுகளிலும் வீழ்ந்து வெடிப்பதாக அங்கிருந்துவரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [61]

# ஜூலை 16 முதல் 30 வரை

## யுத்தத்தில் வீரமரணமடைந்த வேங்கைகள்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவு இராணுவத் தளம் மீதான முற்றுகைப் போரிலும் கட்டைக்காடு, வெற்றிலைக்கேணியில் தரையிறக்கப்பட்ட படையினருடனும் நடந்த சண்டையில் 16-7-91லிருந்து 30-7-91வரை வீர மரணமடைந்த வீர வேங்கைகளின் விபரம் வருமாறு:

குமரப்பா - பாலசுப்பிரமணியம் சிவபாலன், தெல்லிப்பளை, பன்னாலை.

சுகந்தன்- பூபாலசிங்கம் பூலோகச்சந்திரன், சபாபதிப் பிள்ளை வீதி, ஆச்சிரமத்தடி, சுன்னாகம்.

ஸ்ரீரங்கன்-யோகதாஸ் நேசராசா, துன்னாலை வடக்கு, துன்னாலை.

மௌலி-தாமோதரம்பிள்ளை மணிவாசன், கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

புஷ்பன் - நாகராசா புலேந்திரன், நாவற்குழி தெற்கு, கைதடி.

விஜேத் - மோகனதாஸ் சுரேஷ் நிரஞ்சன், கேணிப்புலம் ஒழுங்கை மயிலிட்டி.

யசோ-லோகேஸ்வரன் சுதாகர், மானிப்பாய் வீதி, ஓட்டுமடம்.

அனுசன் - தேவசகாயம் குணம், 60-2 டேவிட் ரோட், குருநகர்.

சங்கர் - வடிவேல் ஜெயந்திரன், நாவற்குழிச் சந்தி, நாவற்குழி.

பாண்டியன்-துரைசிங்கம் கிருஷ்ணகுமார், வடலியடைப்பு, பண்டத்தரிப்பு

அறிவொளி- ஸ்ரீபத்மநாதன் சத்தியசீலன், விதானையார் வீதி, சுண்டிக்குழி.

இளஞ்செழியன் - யோகேஸ்வரன் அரவிந்தன், மயிலியதனை மேற்கு, வல்வெட்டி.

பட்சன்-சீனியர் உதயராசா, மதிதலோடை, புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

சிவா-இராசப்பு அன்ரனி அமலநேசன், கோபாலபுரம் நிலாவெளி, திருமலை.

டயஸ்-நாகமுத்து ஸ்ரீசங்கர், மோகன் வீதி, அச்செழு, நீர்வேலி.

சுருளி-சிவகுரு அப்பன், மயிலிட்டி தெற்கு, மயிலிட்டி.

வினித்தா - தியாகராசா இலங்கேஸ்வரி, புலோலி தெற்கு, புலோலி.

சிவசங்கர் - யோசப் ஜெயமணி, கோதண்டர் நொச்சிகுளம், வவுனியா.

விசயன் - வேலுப்பிள்ளை மாரிமுத்து, சீனிவாசகம் வீதி, கொட்டடி.

நகுலேஸ்வரன் - சிங்காரவடிவேல் தவக்குமார், ஊரிக்காடு வல்வெட்டி.

கைலன் - அரியரட்ணம் செந்தன் சிவபுரம்வட்டு. மேற்கு வட்டுக்கோட்டை 3-ம் வட்டாரம்.

நிசாந்தன் - அருளானந்தம் யூட் அன்ரனி, நெடுந்தீவு மத்தி நெடுந்தீவு.

மணிவாசன் - கணேசநாதன் ஜனார்த்தனன், கௌரிவாசம், 68 காரைக்கால் வீதி, இணுவில்.

கில்பேட்- யோசப் ஜொனி, அன்புவழிபுரம், திருமலை.

இக்பால் - நாகலிங்கம் கிருஷ்ணகுமார், காந்திநகர் திருகோணமலை.

ராமபாரதி - நாகலிங்கம் பதேவானந்தன், ஆயித்தியமலை, செங்கலடி.

காண்டி - கனகரத்தினம் கனகேஸ்வரன் 688, கொத்தம்பியாகுளம், துணுக்காய்.

வேணு - கந்தசாமி பிரபா, சிவானந்த வித்தியாலயம் கல்லடி.

ஆனந்தன்-நேசா அமலதாஸ் 26 றக்காவீதி, சுண்டுக்குழி.

தேவா - அற்புதநாதன் குகதாஸ், குப்பிளான், ஏழாலை.

ஜேம்சன் -சாத்தையா ராமு இந்துபுரம், முறிகண்டி.

சுரேஷ் - சுப்ரமணியம் சிவகுமார், சித்தங்கேணி, வட்டு கிழக்கு,

ராவ் - சின்னையா மோகேஸ்வரன் எருவில் களுவாஞ்சிக்குடி பாரதிபுரம்.

அஜந்தன் - அல்போன்ஸ் சேகர் மலர் இல்லம். மெமோறியல் லேன், மானிப்பாய்.

பப்பா - செல்வம் கணேஷ் 15/12 கன்னதிட்டி வீதி யாழ்ப்பாணம்.

சதீஷ் - தம்பையா யோகநாதன் நாவற்காடு வரணி.

தவச்செல்வி-ராமநாதன் சித்திராஞ்சலி, கெற்பேலி, மிருசுவில், சாவகச்சேரி.

நந்தன்-சின்னத்துரை ஸ்ரீவானந்தன், மட்டுவில். சாவகச்சேரி.

தேவா-சந்திரமோகன், வாகரை, மட்டக்களப்பு.

சேரன்-சண்முகம் ரேய் செழியன், நாகம, பண்டாரவளை.

பிறேம்நாத் - சீனிவாசகம் கௌரிநாதன், மெயின் வீதி, திருக்கோயில்.

எழில்-சந்திரசேகரம் சசிதரன், மயிலங்கூடல், இளவாலை.

இந்திரன்-சண்முகம் பாகரன், வைரவர் கோவிலடி, வீரம்கேணி ரோட், கிரான், மட்டக்களப்பு.

திலக்-சேதுலிங்கம் கிருஷ்ணவரதன், ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.

ரமணி- சின்னத்துரை ரமணன், 234/10, செபஸ்தியார் ரோட், ஒட்டுமடம்.

முரளி-மகாலிங்கம் தவக்குமார், 5ம் வட்டாரம், நெடுந்தீவு மேற்கு.

இருதயராஜ்- நிக்லஸ் லோறன்ஸ், 6ம் கொலனி, சொறிக்கல்முனை, அம்பாறை.

அகிலன் - வேலுப்பிள்ளை கந்தசாமி, கோயில் புளியங்குளம், நெடுங்கேணி.

மணிவண்ணன்-மேரியோசப் பிரான்சிஸ் சேவியர், அரிப்பு, முருங்கன், மன்னார்.

வீரயன் - சிவன் சந்திரன், சீனன்குடா, கப்பல்துறை, திருமலை.

வேல்விழி- கமலா இராசமாணிக்கம், ஆதிகோவிலடி, வல்வெட்டித்துறை.

நளா- லலிதாதேவி நடராசா, புங்குடுதீவு மேற்கு, புங்குடுதீவு.

[மிகுதி நாளை]


## இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணக் கிளை

### நீர்வேலி தெற்குக்கான ஆரம்ப சுகாதார கவனிப்பு அமைப்பாளர்கள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. க. பொ. த. (சாதாரணம்) பரீட்சையில் சுகாதாரம், கணிதம் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடைன் ஆறு பாடங்களில் சித்திபெற்ற ஆரம்ப சுகாதார கவனிப்பு முதலுதவி பயிற்சி சுகாதாரத்தில் போதிய பயிற்சி போன்றவற்றில் அனுபவமுடைய, 25 வயதுக்கு மேற்பட்ட, மேற்குறிப்பிட்ட கிராமத்தைச் சேர்ந்த பெண்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். தகைமையுடையோர் 16-08-91-க்குமுன் விண்ணப்பிக்கவும். விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப்பரீட்சை 19-08-91 முற்பகல் 9-00 மணிக்கு கோப்பாய் சுகாதார சேவை அதிகாரி பணிமனையில் நடைபெறும். தனித்தனி கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது.

ச. சிவானந்தராசா
கௌரவ செயலாளர்,
இ. செ. சங்கம் (யாழ். கிளை)

73, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
03-08-91.

[சி 1478]


## 31ம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக் கிருத்தியமும்

★ ★

01 / 09 / 1919



06 / 07 / 1991

05 - 08 - 1991

திருவாட்டி
### நவமணி சுப்பிரமணியம்

ஜனனமும் மரணமும் இயற்கையே ஆயினும்!
இன்னல் தான் மாறுமோ?
இன்முகம் மறக்குமோ?
நெஞ்சமும் நினைவும் நிலைத்துள்ளவரையும்
எம்மிதயத் துடிப்பினில் என்றென்றும் வாழ்வீர்
"ஓம் சாந்தி"

அந்திமக் கிரிகைகளில் கலந்தும், மலர்வளையம், மலர்மாலை சாத்தியும், அஞ்சலி செலுத்திய அனைவரையும் இதயத்தில் வைக்கின்றோம்.

கணவர்: தா. சுப்பிரமணியம்
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

"மணிரங்கம்"
41, கேசாவில் பிள்ளையார் கோவில் வீதி,
யாழ்ப்பாணம். (சி-5072)

## காணவில்லை



### திரு. செல்லையா சூரியமூர்த்தி

என்பவர்

சித்தசுவாதீனமற்ற நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் இருந்து (1-8-91) வியாழன் இரவு காணாமல் போய்விட்டார். உயரம் 5 அடி 7 அங்குலம் பொதுநிறம் வயது 47. கடைசியாக அவர் அணிந்திருந்த உடை. நீல நிற சேட்டும் மண்ணிற சாரமுமாகும். இவரை அடையாளம் காணுபவர்கள் தயைகூர்ந்து பின்வரும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும்.

நோயாளர் நலன்புரிச் சங்கம் (P. W. S.)
யாழ். போதனா வைத்தியசாலை.
அல்லது திருமதி செல்லையா
'திருவடி நிழல்'
மூத்தவிநாயகர் கோவிலடி,
கரணவாய் தெற்கு, கரவெட்டி. (சி-5074)

# "யாழ். மாவட்டத்தில் சகலருக்கும் இலவசஉணவுப் பொருள் வழங்க வேண்டும்"

## - கூட்டுறவு ஒன்றியம்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்டத்திலுள்ள சகல மக்களுக்கும் இலவச உணவுப் பொருட்களை வழங்க நடவடிக்கை எடுப்பதோடு இக்கட்டான சூழ்நிலைகளிலும் மக்கள் சேவையாற்றும் கூட்டுறவுஊழியர்களுக்கு அபாயப் படியை வழங்குவதற்கும் அரசாங்க அதிபர் என்ற வகையில் தாங்கள் உடன் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என வடமராட்சி கோட்ட கூட்டுறவு ஒன்றியம் யாழ். அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரைக் கேட்டுள்ளது.

வடமராட்சி கோட்ட ஒன்றியத்தினுல் அரசாங்க அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ள மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

எமது பகுதி மக்கள் சிறிலங்கா அரசாங்கத்தால் அமுல் செய்யப்பட்டுள்ள ஊரடங்குச் சட்டத்தால் அமைதி குலைந்து வாழ்கின்ருர்கள். தினமும் காலை தொடக்கம் மாலைவரை ப. நோ. கூ. சங்க கிளைகளில் பங்கீட்டுப் பொருள்களுக்கு அலைந்து திரிகின்ருர்கள். கூட்டுறவுப் பணியாளர்கள் மிகக் குறைந்த ஊதியத்தைப்பெற்றும் மனிதாபிமான உரிமை கருதி பாதுகாப்பு அற்ற பொதுமக்களின் தேவைகளை இயன்றளவு பூர்த்திசெய்துவருகின்ருர்கள். ஆனுல் இவர்களுக்கு அபாயப்படியோ வேறு சலுகைகளோ கிடைப்பதில்லை. எனவே கூட்டுறவுப் பணியாளர்களுக்கு அபாயப்படியினை வழங்கவும், சிறிலங்கா அரசாங்கத்தினுல் அமுல்செய்யப்பட்டுள்ளஊரடங்குச்சட்டத்தைத் தளர்த்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அத்தியாவசிய உணவுப் பொருட்களை வடபகுதி மக்களுக்கு அனுப்பிக்கொண்டிருப்பதாக அரசு பிரச்சாரம்செய்துகொண்டிருக்கிறதே தவிர போதிய உணவுப் பொருட்களை அனுப்புவதில்லை. எமது பகுதிக்கு வேண்டிய உணவுப் பொருட்களை அனுப்ப அரசு தயங்குகின்றது. எனவே எமது மக்களுக்கு வேண்டிய உணவுப்பொருட்களை பருத்தித்துறை துறைமுகத்தினூடாக அனுப்பும் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு அரசை வற்புறுத்தவேண்டும். [52]

## வடக்கு கிழக்கு பகுதிகளில் உணவுநிவாரணம்நிறுத்தம்

[கொழும்பு]

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் இலவச உலர் உணவு நிவாரணம் உடனடியாக நிறுத்தப்படவேண்டும் என்று அரச அதிபர்களுக்கு உத்தர விடப்பட்டுள்ளது.

இம்மாகாணங்களில் அகதி முகாம்களில்இருப்பவர்களுக்கு மட்டுமே இனிமேல் நிவாரணம் வழங்கவேண்டும் என்று வடக்கு-கிழக்கு அரச அதிபர்களுக்கு அரசாங்கம் உத்தர விட்டுள்ளது.

இம்மாதம் 1-ம் திகதியிலிருந்து இதனை நடைமுறைப் படுத்தவேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது.

## முதலுதவிப் பயிற்சி

[யாழ்ப்பாணம்]

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் பொறியியல் மாணவர் மன்றத்தால் அவசரகால முதலுதவிப் பயிற்சி வகுப்பு நேற்று முன்தினம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

## பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை துயர் துடைப்புச் சங்கத்தின்பொதுக் கூட்டம் ஊர்காவற்றுறைப் பங்குத்தந்தை அருட்திரு எஸ். எப். கிருபானந்தன் தலைமையில் யாழ்புனித சாள்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்கஅதிபர்திரு. ஜோசப் நிர்வாக, பொதுச்சபை உறுப்பினர்,இராணுவ நடவடிக்கையால் ஊர்காவற்றுறையிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் பலர்கலந்துகொண்டனர். வீரமரணமடைந்த போராளிகளுக்கான மௌன அஞ்சலியுடன் கூட்டம் ஆரம்பமானது

வணபிதா, தொடர்ச்சியாக பாதிக்கப்பட்டுஇடம்பெயர்ந்த தீவக மக்கள் பிரச்னை மனிதாபிமானத்தோடு அணுகப் படவேண்டும் என்றும் பாதிக்கப்பட்ட தீவகமக்களின் குரலாக இச்சங்கம் திகழும் என்றும் ஒன்றிணைப்பு, ஒத்துழைப்பு எமது நோக்மாகும் என்றும் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

# தமிழீழம் கிடைக்கும் வரை போராட்டம் தொடரும்

(நாவற்குழி)

"சுதந்திரமான தமிழீழம் கிடைக்கும் வரை புலிகளின் போராட்டம் தொடரும். இன்று ஆனையிறவில் வீரமரணமடைகின்ற போராளிகள் ஒவ்வொருவரும் தான் பரணித்த பின்னர் தன்னுடைய துப்பாக்கிகளை ஏனைய மக்கள் கட்டாயம் எடுப்பார்கள்என்ற நம்பிக்கையிலேயே மரணிக்கிருர்கள்.

இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட மக்கள் உறவு கொள்கை முன்னெடுப்பு பிரிவைச் சேர்ந்த திரு. செல்வம் மட்டுவில் கமலாசினி வித்தியாசாலையில் நடைபெற்ற போர்க்கால கருத்தரங்கில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் தெரிவித்தார்.

திரு. சி. தர்மலிங்கம் தலைமையில் நடைபெற்றஇக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசுகையில்:இது வரை நடைபெற்ற யுத்தத்திலே ஆயுதமேந்தியவர்கள் கூடுதலாக மரணிக்கவில்லை. போராட்டத்திலிருந்து அந்நியப்பட்டு வாழ்ந்தவர்களே கூடுதலாக மரணித்துள்ளார்கள். ஆகையால் வீட்டுக்கொருவீரன்என்ற அடிப்படையில் நாடுகாக்க வாருங்கள். இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கும் இந்தப்போராட்டம் ஒரு தலைமைக்காக நடக்கவில்லை. எமதுதமிழ் இனத்தின் விடிவிக்காக நடக்கும் தர்மயுத்தமாகும், தர்மம் அன்புபற்றிப்பேசும் புத்தபிக்குகள் இன்று போராட்டம் பற்றியும் போருக்கு ஆள்திரட்டும்பணியிலும்ஈடுபட்டிருக்கும் போது நாம் மட்டும் தூங்குவதா? ஆகையால் நாம் இன்றே போர்க்களம் போக வேண்டும்" என்ருர்.

தென்மராட்சி மகளிர் முன்னணிப் பொறுப்பாளர் செல்வி சங்கரி உட்பட பலர் உரையாற்றினுர்கள்.

கருத்தரங்கு முடிவில் தென்மராட்சி விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக்கழகம் வழங்கிய "அப்பு ஆனையிறவுக்கு போகிருர்" என்னும் நாடகமும் இடம்பெற்றது. [107]

## 16-ஆம் கட்ட நிவாரணம்

[யாழ்ப்பாணம்]

ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 16-ம் கட்டத்துக்குரிய நிவாரணங்களைப் பின்வரும் ஒழுங்கின்படி வழங்க இருக்கிருர்கள்.

இன்று 5-ம் திகதி 7, 7/1, 1, 4 ஆகிய கிளைகளுக்கும், 6-ம் திகதி 8, 2, 5, 6 கிளைகளுக்கும், 7-ம் திகதி 11, 3, 9 ஆகிய கிளைகளுக்கும் 8-ம் திகதி 8, 10, 13 சுருவில் அகதி முகாம், சின்னமடுஅகதி முகாம்களுக்கும் வழங்கப்படுமென பொதுமுகாமையாளர் ஜெயராசா தெரிவித்துள்ளார். [152]

## நேர்முகப பரீட்சை

[யாழ்ப்பாணம்]

யாழ். பிராந்திய சுகாதார திணைகளத்தில் சுத்திகரிப்பு தொழிலாளர் மற்றும் பரிசாரகர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் அண்மையில் நடைபெற்றன. (56)

## எல்லோரும் இணைந்து போராட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

"மாணவர்கள் ஒரு கையில் புத்தகம் ஏந்தவேண்டும்; மறு கையில் ஆயுதம் ஏந்தவேண்டும்"

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கத் தலைவர் அரவிந்தன், யாழ். இந்துக் கல்லூரியில் நடைபெற்ற கருத்தரங்கில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: "ஆயுதம் பெருந்தொகையாக இருந்தும் அவற்றை ஏந்தும் கரங்கள் குறைவாகவே உள்ளன. இலங்கையில், இரு நாடுகளுக்கிடையில் இரு சம பலமுள்ள இராணுவம் ஆனையிறவுப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாகச் சர்வதேசப் பத்திரிகைகளில் செய்திகள் வெளியாகின்றன.

"ஆகையினுல் உங்களின் கடமை உங்களை அழைக்கின்றது. சிங்களப் பேரினவாதக் கொடுமைகளிலிருந்து காப்பாற்றுவதற்கு; இந்த ஆனையிறவுத் தாய்ப் போர் வெற்றி பெற எல்லோரும் இணைந்து போராட்டத்தில் ஈடுபட முன் வாருங்கள்" என்ருர். (125)

## நெல்லை பேரனின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பு

(யாழ்ப்பாணம்)

எழுத்தாளர் நெல்லை பேரனின் மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு என்று வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தினரால் அல்வாயில் நடத்தப்பட்ட இரங்கல் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசிய சி. பவானந்தன் தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

"விவசாயியின் மகனுகப் பிறந்து அரச ஊழியனுக, சிறுகதை எழுத்தாளனுக, பத்திரிகையாளனுக. கவிஞனுக, சமூகசேவகனுக, இலக்கிய வாதியாக, பேச்சாளனுக திகழ்ந்ததோடு மட்டுமல்லாமல் சுருக்கெழுத்து, தட்டச்சுக்கலை நுட்பங்களையும் அறிந்து அத்துறையை கவியரங்கு, பட்டிமன்றம், நகைச்சுவை ஆகியவற்றினூடாக வளர்த்த பெருமையைஉடைய நெல்லை க. பேரனின் திடீர் மரணம் ஈடுசெய்யமுடியாத ஒன்று".

கழகச் செயலாளர் க. வ. சிவச்சந்திரதேவன் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் செல்வி மாலினி இராசேந்திரம் உட்பட பலர் உரையாற்றினர்.

# குண்டு தயாரிப்பு மூவர் தமிழகத்தில் கைது

[சென்னை]

கோயம்புத்தூரில் விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக எறிகுண்டு தயாரிப்பில் ஈடுபட்டிருந்த மேலும் மூன்று பேர் நேற்று முன்தினம் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த மாதம் ஆவாரம் பாளையத்தில் கண்டு பிடிக்கப்பட்ட சட்டவிரோத எறிகுண்டுத் தயாரிப்புப் பிரிவில் இவர்கள் இருவரும் எறிகுண்டுகள் தயாரித்து விடுதலைப்புலிகளுக்கு அளித்து வந்தனர் என்றும் பொலிசார் தெரிவித்தனர். [மா]

# வடபகுதியில் க. பொ. த. பரீட்சை நடைபெற வில்லை

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் 3ம் திகதி க.பொ.த. உயர்தர பரீட்சை நடைபெறவில்லை.

தற்போதைய நிலமை சீரடைந்த பின் இப்பகுதியில் பரீட்சை ஆரம்பிக்கப்படும் என்று பரீட்சை ஆணையாளர் ஆர்தர் வெதமுல்ல தெரிவித்தார்.

தேவையான பத்திரங்களையும், உபகரணங்களையும் இந்த இடங்களுக்கு அனுப்பக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட்டதும் இப்பகுதிகளில் பரீட்சை நடத்தப்படும் என்றும் அவர் கூறினுர்.

## உண்ணுவிரதம்

[யாழ்ப்பாணம்]

தமிழீழ மீட்பு போர் விரைவில் வெற்றியடைய வேண்டுமெனப் பிரார்த்தித்து கைதடி நவபுரம் துர்க்கை அம்மன் ஆலயத்தில் கடந்த வாரம் உண்ணுவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

பதினுன்கு மணித்தியாலங்கள் அனுஷ்டிக்கப்பட்ட இந்த உண்ணுவிரதத்தில் கூட்டுப் பிரார்த்தனை: பஜனை பாடல்களும் நிகழ்த்தப்பட்டன.

## மக்கள் அஞ்சலி

(நாவற்குழி)

ஆனையிறவு இராணுவ முகாம் இராணுவத்திற்கும், விடுதலைப்புலிகளுக்குமிடையில் நடைபெற்ற நேரடிமோதலின் போது வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட போராளியான அலெக்ஸ் [பவளகாந்தன் பூபாலசிங்கம், கச்சார்வெளி, பளை] இன் புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக இத்தாவில் வேம்பொடுகேணி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது.

பின்னர் இந்த மாவீரனின் புகழுடல் பாண்ட் வாத்திய சகிதம் ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டு கொடிகாமம் மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமானது. (107)

## இராசி பலன்

05 - 08 - 1991
(தமிழ்த் திகதி ஆடி 20)
திங்கட்கிழமை

தசமி மு. இ. 8-36 வரை, ரோகினி பி. இ. 4-36 வரை, அமிர்தயோகம், கரிநாள், இராகுகாலம் காலை7-34முதல் 9-04 வரை, சுபநேரம் பகல் 12-04 முதல் 1-34வரை.

மேடம்: விரோதிகள் நட்பு, மனக்கலக்கம், பணமுடை.

இடபம்: வருவாய் அதிகரிப்பு தொழில் சிறப்பு, குடும்ப மகிழ்ச்சி.

மிதுனம்: நண்பர் குரோதம், தொழில் கஷ்டம், மனக்கவலை.

கடகம்: உறவினர் வருகை, வீட்டில் சுபகாரியம், வேலைப் பழு.

சிங்கம்; காரிய பலிதம், பயணங்களால்துன்பம், வெறுப்பு.

கன்னி: தவருன கொள்கை, அடிபணிதல், புத்திரர் கவலை.

துலாம்: சிறுவிபத்து, வாக்கு கலகம், கருத்துமோதல்.

விருச்சிகம்: விருந்து வைபவம், மனைவியால் பெருமை, புகழ்.

தனுசு: இல்லற சுகம், புதிய உறவு, தொழில் உறவு.

மகரம்: கண்ணியக்குறைவு, பெண் தொல்லை, அலைச்சல்.

கும்பம்: வழித்தொல்லை, குடும்ப சிறப்பு, அதிகாரம்.

மீனம்: ஏமாற்றம், வீண் செலவு, மனச்சுமை, பயம்.

- ஜோஸ்யர்

## தமிழக காவல் துறையினருக்கு
# நவீன ஆயுதம் வழங்கப்படும்

### பாதுகாப்பு அமைச்சர் அறிவிப்பு

(சென்னை)

போராளிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தத் தமிழகக் காவல்துறைக்கு இந்திய இராணுவ அமைச்சகத்தின் தளபாடத் தொழிற்சாலையில் இருந்து நவீன ரக ஆயுதங்கள் வழங்கப்படுமென்று இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் சரத் பவார் தெரிவித்தார்.

போராளிகளைக் கட்டுப்படுத்துவதற்காகத் தமிழக அரசுக்கு மத்திய அரசு அனைத்து உதவிகளையும் வழங்குமென்றும் கூறிய அவர் மேலும் தெரிவித்தாவது:

5மைல் தூரம் கண்காணிப்பு மண்டலம் பாக்குநீரிணைக் கடல் பகுதியில் நிறுவபபடும். கடலிலும் வானிலும் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப் படும்.

தோப்புத்துறை, கோடிக்கரை, மல்லிப்பட்டினம் தொண்டி, ஜகதாப்பேட்டை ஆகிய இடங்களில் கப்பற்படைத் தளங்கள் நிறுவப் படும்.

தமிழக அரசு கடலோரப் பாதுகாப்பை வலுப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டதன்பேரிலேயே அனைத்து உதவிகளும் மத்திய அரசினால் வழங்கப்படுகிறது.

## போராளிகள் புகழுடல்கள்
# தீயுடன் சங்கமம்

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவில் நேற்று முன் தினம் விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்திற்கும் இடையில் இடம்பெற்ற நேரடி மோதலில் பிரதீப் [நாகமுத்து- செல்வராசா, கப்பன் குளம், புன்னாலைக்கட்டுவன்], அருண் [கோவிந்தசாமி அருளானந்தம், மாதகல்], ஹென்றி [சின்னராசா, சிறிரங்கன், கும்புறுப்பிட்டி] ஆகிய போராளிகள் வீரமரணமடைந்தனர்.

வீரமரணமடைந்த போராளிகளின் புகழுடல்கள் நேற்று மாதகல் புனித சூசையப்பர் மகாவித்தியாலயத்தில் பொதுமக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது,

பின்பு விடுதலைப் புலிகள் இயக்கப் பிரமுகர்கள் திரு. தேவர், திரு குகதாஸ் மாஸ்டர் ஆகியோரின் அஞ்சலியுரையைத் தொடர்ந்து போராளிகளின் புகழுடல்கள் ஏராளமான பொதுமக்களின் கண்ணீரஞ்சலியுடன் கோப்பாய்மாவீரர் மயானத்தில் தீயுடன் சங்கமமாக்கப்பட்டது. [க]

## போரில் வெற்றி தோல்வி
# முக்கியமல்ல! ஜெனரல் ரணதுங்க

[கொழும்பு]

ஆனையிறவுப்போரில் வெற்றி தோல்வியல்ல முக்கியம். இக்காலகட்டத்தில் எத்தனை உயிர்கள் அநியாயமாக பலியாகின என்பதையே நாம் சிந்திக்கவேண்டும்.

இவ்வாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ரணதுங்க கொழும்பில் பத்திரிகையாளரிடையே ஆனையிறவு முகாமில் காயப்பட்ட படையினரை மீட்டுக்கொண்டது பற்றி குறிப்பிடும்போது கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது;

தேவையற்ற சண்டையை தவிர்த்து பல உயிர்ப்பலிகளை தவிர்த்திருந்தால் நாம் அனைவரும் மகிழ்ச்சி அடையலாம். மக்களின் அநியாய உயிர்ப்பலிகளை தவிர்க்கவே ஜனாதிபதி அடிக்கடி பேச்சுவார்த்தைபற்றி குறிப்பிட்டு வந்துள்ளார். இனிமேலாவது யுத்த வழியை விடுத்து பேச்சுவார்த்தை மூலம் பிரச்னைக்கு தீர்வுகாண முடியுமா என்பதே அரசின் ஆவலாகும். [பூ]

## ராஜீவ் கொலை விவகாரம்
# 2வது ஆணைக்குழு நியமனம்

(புதுடில்லி)

ராஜீவ் காந்தி கொலை குறித்து விசாரணைசெய்வதற்கு 2வது நீதிச் சேவை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட இருப்பதாக இந்திய மத்திய அரசு தீர்மானித்திருப்பதாக பி. ரி. ஐ. செய்தி ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

தற்பொழுது விசாரணையில் ஈடுபட்டுவரும் விசாரணைக்குழு அதன் நடவடிக்கைகளை விரிவுபடுத்துவதற்கு மறுத்ததை அடுத்தே மேற்படி முடிவு எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க)

## 10 லட்சம் ரூபா பெறுமதி
# தங்கம் கடத்தியவர் கைது

(கொழும்பு)

சிங்கப்பூரில் இருந்து பத்து லட்சம் ரூபா தங்கத்தைக் கடத்த முயன்றவர் கைதுசெய்யப்பட்டார்.

சிங்கப்பூரிலிருந்து 293 தங்கச் சங்கிலிகளை இலங்கைக்குக் கடத்திவந்த ஒருவர் கட்டுநாயக்கா விமானநிலையத்தில் வைத்துச் சுங்கஅதிகாரிகளால் கண்டுபிடிக்கப்பட்டுக் கைது செய்யப்பட்டார்.

## அரசியல் கட்சிகளுடன்
# சபாநாயகர் பேச்சு

(கொழும்பு)

இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குப் பாராளுமன்றத் தெரிவுக்குழு அமைப்பது தொடர்பாகப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்காத அரசியற் கட்சிகளுடன் சபாநாயகர் பேச்சுவார்த்தை நடத்திவருகிறார்.

சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது கடந்த சில தினங்களாகப் பாராளுமன்றத்தில் அங்கம் வகிககாத அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைத் தனித்தனியே அழைத்து இது தொடர்பாகப் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அகதிகளை தங்க வைக்க
# இரு முகாம்கள்

(கொழும்பு)

தமிழ்நாட்டிலுள்ளஇலங்கை தமிழ் அகதிகள் திரும்பியதும் அவர்களை தற்காலிக முகாம்களில் தங்கவைக்கஏற்பாடுகள் செய்யப்படும்ம என்று புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த அகதிகளுக்காக மன்னாரில் பேசாலை, தாழ்வுப்பாடு ஆகிய இடங்களில் இரண்டு முகாம்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

## தீயுடன் சங்கமம்

(நாவற்குழி)

ஆனையிறவில் வீரமரணத்தைத் தழுவிக் கொண்ட போராளியான அசோக்கின் [கதிர்காமநாதன், ரகுநாதன் சங்கத்தாவயல், இயக்கச்சி) புகழுடல் மக்கள் அஞ்சலிக்காக மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் வைக்கப்பட்டு அஞ்சலிக் கூட்டமும் இடம்பெற்றது.

புலிகளின் இராணுவ அணிவகுப்புமரியாதையுடன் கொடிகாமம் மாவீரர் மயானம் வரை எடுத்துச்செல்லப்பட்ட மாவீரர் புகழுடல் புலிகளின் மரியாதை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு தீயுடன் சங்கமமானது. [107]

## சுவிஸில் கத்திக்குத்து
### நால்வர் காயம்

(சூரிச்)

சுவிற்ஸர்லாந்தில் நான்கு இலங்கைத் தமிழர்கள் கத்தியால்குத்தப்பட்டு காயமடைந்துள்ளனர்.

கடந்த மாதம் சுவிஸிலுள்ள சூரிச் நகரில் இடம்பெற்ற இச் சம்பவத்தில் காயமடைந்தவர்கள் விபரம் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

## கோட்டை

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

கின்றது. இதன்படி ஆனையிறவுக்குள் இராணுவத்தின் பிரவேசம் நிரந்தரமானதாக இருக்குமா?

விடுதலைப் புலிகளின் கடும் தாக்குதல்களுக்கு எதிர் கொள்ளமுடியாத நிலையில் யாழ். கோட்டைக்குள் இருந்து எவ்வாறு இராணுவம் வெளியேறியதோ அதேபோல் ஆனையிறவு முகாமுக்குள் இருந்தும் இராணுவம் வெளியேறும் நிலை ஏற்படலாம் என்று 'இராணுவ அவதானிகள்' கருதுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது. (மா)

## திருநாள்

(ஊர்காவற்றுறை)

சரவணை சின்னமடு செபமாலை மாதா திருநாள் இன்று 5-ஆம் திகதி காலை 7-30 மணிக்கு யாழ்ப்பாணம் புனித மரியாள் பேராலயத்தில் அடைக்கலமாதா ஆலயப் பங்குத்தந்தை அருட்திரு. சா. பி. கிருபானந்தன் அடிகளால் நிறைவேற்றப்படுகின்றது. [59)

## ஆலோசனைக் கூட்டம்

(வேலணை)

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த நயினாதீவு, புங்குடுதீவு, மண்கும்பான், வேலணை, அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய இடங்களுக்குட்பட்ட சனசமூக நிலையங்களின் தலைவர், செயலாளர், தனாதிகாரிகள் உட்பட சகல நிர்வாகிகளுக்குமான போர்க்காலச் சூழ்நிலையில் மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கான ஆலோசனைக் கூட்டம் இன்று திங்கட்கிழமை காலை 10-00மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் நடைபெறும். [75]

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்]

பரியோவான் கல்லூரியில் கல்வி பயிலும் ஆண்டு 10 இற்கு மேற்பட்ட சகல மாணவர்களையும் இன்று திங்கட்கிழமை காலை 10-30 மணிக்கு கல்லூரியில் கூடுமாறு உயர்தர வகுப்பு மாணவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## பொம்மரிலிருந்து

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

நடத்தியது.

குடத்தனையில் பிரதானவீதி வழியாகச் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தோர் மீதும், குடாரப்பு தேவாலயத்துக்கு அருகில் விளையாடிக்கொண்டிருந்த சிறுவர்களை நோக்கியும் பொம்மர் விமானம் ரொக்கட் குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டது. [61]

## தடுப்பு முகாம்களில் பரீட்சை நிலையம்

[கொழும்பு]

தடுப்பு முகாம்களில் உள்ளவர்களும் க. பொ. த உயர்தர பரீட்சை எழுதுவதற்கு வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

இதற்காக மகசீன், பூஸா முகாம்களில் விசேட பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன,

## இராணுவ

1-ம் பக்கத் தொடர்ச்சி)

தாகவும், தற்போது முகாமில் ஹெலிகொப்டர்கள் இறங்கி ஏறக்கூடிய நிலை உள்ளதாகவும் அரசு மேலும் தெரிவித்தது. (க)

## வடபகுதி நீங்கலான மதிப்பீடு

[கொழும்பு]

யாழ்ப்பாணம், கிளிநொச்சி. முல்லைத்தீவு. மன்னார் ஆகிய நான்கு மாவட்டங்கள் நீங்கலாக மற்றைய 21 மாவட்டங்களிலும் தொலைக்காட்சிப் பெட்டிகளை வைத்திருப்போர் பற்றிய மதிப்பீடு இன்று ஆரம்பிக்கப்பட்டு தொடர்ந்து ஒரு வாரத்திற்கு நடைபெறவிருக்கிறது. கிராம சேவையாளர் மூலம் இந்த புள்ளி விபர மதிப்பீடு திரட்டப்படவிருக்கிறது. [மா]

## ஹமில்டன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

24 நாட்களாக புலிகளின் முற்றுகைகுள்ளிருந்த முகாமுக்கு யுத்தம் ஆரம்பிக்கப்பட்டபின் இவர் சென்றது இதுவே முதல்தடவையாகும்

தளபதி ஹமில்டன் வனசிங்கா காயமடைந்த சிப்பாய்களுக்கு ஆறுதல் வழங்கியதுடன் அவர்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்குவதற்கும் ஏற்பாடு செய்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## போராட்டம்

[சென்னை]

காவிரி நீர் பிரச்சனையில் நடுவர் தீர்ப்பை அமுல்செய்வதற்கு மத்திய அரசு பணிப்புரை வழங்காத பட்சத்தில் தமிழ்நாடுக்கு வருகைதரும் காங்கிரஸ் எம். பி களுக்கும் அமைச்சர்களுக்கும் எதிர்ப்பு தெரிவித்து கறுப்புக்கொடி காட்டுவதென தமிழ்நாடு விவசாயக்கழகம் அறிவித்துள்ளது. (மா)

## பட்டினியை

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

யாழ். அரசாங்க அதிபர், செஞ்சிலுவைச்சங்கம் போன்றவற்றிற்கும் எழுவைதீவு மக்கள் இது தொடர்பான மகஜர்களை அனுப்பிவைத்துள்ளனர்.

உடனடியாக எழுவை தீவிற்கு உணவுப் பொருள் அனுப்பிவைக்கா விட்டால் பட்டினியால் பலர் இறக்க வேண்டி ஏற்படும் என்றும் அந்த மகஜரில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. [59]

## 300க்கும

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துக்கு மேற்பட்ட போராளிகள் காயமடைந்துள்ளார்கள். ஆயுதங்களை தூக்குவதற்கு பெரும்தொகையாக மாணவர்கள் முன்வரவேண்டும்.

பொதுவாக ஸ்ரீலங்காவுடன் மட்டும் நாம் மோதவில்லை. அமெரிக்கா, இஸ்ரவேல் போன்ற நாடுகளுடனும் நாம் மோதுகிறோம். ஏனெனில் அமெரிக்கா, இஸ்ரவேல் ஆகிய நாடுகளிடம் இருந்து பெற்ற ஆயுதங்களை ஸ்ரீலங்கா அரசு எம்மீது பயன்படுத்துகிறது என்றும் குறிப்பிட்டார். [க]

## கடற்படை ரோந்தினால்
# மீனவர் பாதிப்பு

(புலோலி)

வடமராட்சி கிழக்குக் கரையோரப்பகுதியில் கடற்படை ரோந்து இடம்பெற்று வருவதால் குடத்தனை. நாகர்கோவில், செம்பியன்பற்றுப் பகுதிகளிலுள்ள மீனவர்கள் கடலுக்கு மீன் பிடிக்கச்செல்ல முடியாதுள்ளனர்.

இக்கரையோரப் பகுதியில் ரோந்து செலலும் பீரங்கிப்படகுகளிலிருந்து பீரங்கித் தாக்குதல்களும் மேற்கொள்ளப்படுகின்றன, அண்மையில் செம்பியன்பற்று, மணல்காடு பகுதிகளை நோக்கிப் பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

இத்தாக்குதல்களில் செம்பியன்பற்றுப் பகுதியில் சில வீடுகள் சேதமடைந்ததாக தெரிவிக்கப்படுகின்றது. (61)

## கிட்டுவை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

உத்தரவுக்கமைய வெளியேற மறுத்தால் அவர்கட்டாயமாக நாடு கடத்தப்படுவார் என அரசு சார்பான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளையில் திரு. கிட்டு தமது விருப்பப்படி எந்த நாட்டிற்கும் செல்ல 10 நாட்கள் அவகாசம் வழங்கப்பட்டுள்ளதாகவும் தாம் சிகிச்சைபெற வேண்டுமென்ற காரணம் காட்டி பிரிட்டனின் உத்தரவுக்கு அவர் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடுமென விடுதலைப்புலிகள் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under licence Number B/180320/81